# ஜனவரி – 20 –பொதுக்கால இரண்டாம் ஞாயிறு
புனித செபஸ்தியார்

“அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” யோவா.2:5

## முதல் வாசகம் : ஏசாயா 62 : 1 - 5

சீயோனின் வெற்றி வைகறை ஒளியெனவும், அதன் மீட்பு சுடர் விளக்கெனவும் வெளிப்படும்வரை, அதனை முன்னிட்டு மவுனமாயிரேன் எருசலேம் பொருட்டுச் செயலற்று அமைதியாயிரேன். பிறஇனத்தார் உன் வெற்றியைக் காண்பர் மன்னர் யாவரும் உன் மேன்மையைப் பார்ப்பர் ஆண்டவர் தம் நாவினால் சூட்டும் புதியதொரு பெயரால் நீ அழைக்கப்படுவாய். ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய் உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய். ”கைவிடப்பட்டவள்” என்று இனி நீ பெயர்பெற மாட்டாய் ”பாழ்பட்டது” என இனி உன் நாடு அழைக்கப்படாது நீ ”எப்சிபா” என்று அழைக்கப்படுவாய் உன் நாடு ”பெயுலா” என்று பெயர் பெறும். ஏனெனில், ஆண்டவர் உன்னை விரும்புகின்றார் உன் நாடு மணவாழ்வு பெறும். இளைஞன் கன்னிப் பெண்ணை மணப்பதுபோல உன்னை எழுப்பியவர் உன்னை மணந்து கொள்வார் மணமகன் மணப்பெண்ணில் மகிழ்வதுபோல் உன் கடவுள் உன்னில் மகிழ்வார்.

**பதில்பாடல் :** அனைத்து மக்களுக்கும் ஆண்டவரின்
வியத்தகு செயல்களை அறிவியுங்கள்.

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 12 : 4 – 11

சகோதரர் சகோதரிகளே! அருள்கொடைகள் பலவகையுண்டு. ஆனால் தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பலவகையுண்டு. ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகையுண்டு. ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர். பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார். இன்னொருவருக்கோ அதே ஆவியார் அறிவு செறிந்த சொல்வளத்தை அளிக்கிறார். அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். அந்த ஒரே ஆவியார் மற்றொருவருக்குப் பிணிதீர்க்கும் அருள் கொடையையும் அளிக்கிறார். தூயஆவியார் ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும் இன்னொருவருக்கு இறைவாக்கு உரைக்கும் ஆற்றலையும்இ வேறொருவருக்கு ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும், மற்றொருவருக்குப் பல்வகை பரவசப் பேச்சு பேசும் ஆற்றலையும், பிறிதொருவருக்கு அப்பேச்சை விளக்கும் ஆற்றலையும் அருளுகிறார். அந்த ஒரே ஆவியாரே இவற்றை யெல்லாம் செயல்படுத்துகிறார் அவரே தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளிக்கிறார்.

## நற்செய்தி : யோவான் 2 : 1 - 12

கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்புப் பெற்றிருந்தனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, ”திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது” என்றார். இயேசு அவரிடம், ”அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம், ”அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்றார். யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர்கொள்ளும். இயேசு அவர்களிடம், ”இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்” என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்பு வரை நிரப்பினார்கள். பின்பு அவர், ”இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள்” என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத் தெரியவில்லை தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, ”எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர் யாவரும் விருப்பம் போலக் குடித்தபின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்?” என்று கேட்டார். இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம். இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். இதன் பிறகு அவரும் அவர் தாயும் சகோதரர்களும் அவருடைய சீடரும் கப்பர்நாகும் சென்று அங்குச் சில நாள்கள் தங்கியிருந்தனர்.

**தியானம்:** தோல்வி என்று மனிதன் நினைப்பதை கடவுள் வெற்றியாக மாற்றுகின்றார். சாபம் என்று மனிதன் நினைப்பதை, கடவுள் ஆசீர்வாதமாக மாற்றுகின்றார். முடிவு என்று மனிதன் நினைப்பதை, கடவுள் தன்னுடைய ஆரம்பமாக மாற்றுகின்றார். வீழ்ச்சி என்று மனிதன் நினைப்பதைக் கடவுள் படிக்கட்டுகளாக பயன்படுத்துகின்றார். கட்டுகின்றவர்கள் உதவாது என்று ஒதுக்கிய கல்லைத்தான் கடவுள் தனது கரங்களால் ஆசீர்வதித்து மூலைக்கல்லாக மாற்றுகின்றார் (திபா.118:22). வலுவற்றது என்று உலகம் கருதுபவற்றிலிருந்து தான் வலுவானதை வெளிக்கொணர்கின்றார் (நீதி.6:15), மலடி என்றும் ஒன்றுக்கும் உதவாதவள் என்று அழைக்கப்பட்டவர்கள் வழியாகத்தான் மக்களை ஆசீர்வதிக்கும் நீதித்தலைவர்களையும் இறைவாக்கினர்களையும் கடவுள் உருவாக்கினார் (நீதி.13:3-5, 1சாமு.1:20, லூக்.1:24-25). அனைத்தையும் புதியனவாக்கும் தூய ஆவியானவர் இன்று நம்மையும் புதியதாக மாற்றுகின்றார். தூய ஆவியானவர் தம்முடைய கொடைகள் வரங்கள் கனிகள் இவற்றால் ஒரு மனிதரை நிரப்புகின்றபோது அந்த மனிதர் வேற்று மனிதராக மாற்றப்படுகின்றார். உலகத்தின் பார்வையில் சாதாரண சாமானிய மனிதர்களாகத் தோன்றினாலும் அசாதாரண காரியங்களை அந்த மனிதர் மூலமாகவும் இறைவன் இன்று நிறைவேற்றிக் காட்டுவார். அர்ப்பணிப்பு மற்றும் அபிஷேகத்தைப் பெற்ற மனிதர்களால்தான் இவ்வுலகத்திற்கு ஆசீர்வாதங்களை கொண்டுவர முடியும். வாழ்க்கையில் நாம் வெற்றி பெறுகின்றோமா? அல்லது தோல்வியைத் தழுவுகின்றோமா? வாழ்க்கையில் நாம் சாதிக்கின்றோமா? அல்லது வீழ்ந்து போகின்றோமா? என்பதை அடிப்படையாகவைத்து நமது வாழ்வு தீர்மானிக்கப்படுவதில்லை மாறாக நாம் கடவுளின் கரங்களில் தவழுகின்றோமா?, கடவுளின் ஆவியால் வழிநடத்தப்படுகின்றோமா? என்பதில்தான் வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம் அடங்கியிருக்கின்றது. “கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்களே கடவுளின் மக்கள்” (உரோ.8:14). கடவுளின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்ட வெறுமையான கற்சாடிகள் மக்களுக்கு இன்பம் கொடுக்கும் திராட்சை இரசத்தைக் சுமக்க முடிந்தது. உலகத்தில் அது இருக்கும்வரை சாதாரண வெறுமையான கற்சாடி, இயேசுவின் கரங்களில் வீழ்ந்தபிறகு அது அசீர்வாதத்தை, இன்பத்தை சுமந்துசெல்லும் கற்சாடிகளாக மாறிப்போனது. நமது வாழ்க்கையை நாமே அமைத்துக்கொள்ள முற்படுகின்றபோது நமது வாழ்க்கையில் இரசம், இன்பம், அமைதி குறைந்துபோகின்றது. இயேசுவின் கரங்களில் நமது வாழ்வை அற்பணிக்கும்போது வெறுமையான நமது வாழ்வு அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டு வியக்கும் உன்னதமான வாழ்வாக மாறுகின்றது. இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஆசீர்வாதமாக மாறுகின்றது. எனவே ஆவியின் அபிஷேகம் பெற நம்மை அர்ப்பணிக்க தயாரா?